8th August 1966]

திரு. து. ப. அழகமுத்து : *தலைவர் அவர்களே, இதுவரை கைது செய்யப்பட்டிருக்கிறவர்களில் அதிகாரிகள் எத்தனை பேர் ? கன்டிராக்டர்கள் எத்தனை பேர் ?*

கனம் திரு. வெ. ராமையா : *அதிகாரிகள் 16 பேர்கள். கன்டிராக்டர்கள் 19 பேர்கள்.*

திரு. எஸ். மணி : *தலைவர் அவர்களே, இன்னும் கைது செய்யப்பட வேண்டிய அதிகாரிகள் அங்கே நிறைய இருப்பதாக அந்த வட்டாரத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் ; பிடிபடாத நிலையில் இருக்கும் குற்றவாளிகளையும் பிடிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?*

கனம் திரு. வெ. ராமையா : *நான் ஆரம்பத்தில் சொன்னேன், பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது என்று. கனம் அங்கத்தினரிடம் ஏதாவது விவரம் இருந்தால் இன்வெஸ்டிகேஷன் போலீசாரிடம் கொடுக்கலாம்.* 9-00 a.m.

SRI S. MADHAVAN : Sir, under rule 40 of the Assembly Rules, I request that an half-hour debate be allowed on the subject matter of this question. A huge amount is involved. . .

MR. SPEAKER : The Hon. Minister has already replied that the matter is under investigation.

SRI S. MADHAVAN : The Hon. Minister cannot give any opinion. But he can give the facts, how much fraud has been committed, who are involved and so on.

MR. SPEAKER: There is no doubt about the rule, and the hon. Member can claim an half-hour debate. But, as the matter is under investigation, I do not think I can allow it now.

விளை பொருள்கள் பேரில் வரி

***216 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** *கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

விவசாயிகளுக்கு, அவர்கள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களின் அடிப்படையில் வரி விதிக்கும் யோசனை ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

கனம் திரு. வெ. ராமையா : இல்லை.

திங்கள் கிழமைகளில் உணவு விடுதிகள் அடைப்பு

***217 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :**
திரு. மு. கருணாநிதி :
திரு. செ. மாதவன் :
திரு. கரு. சீமைச்சாமி :
} *கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் திங்கட்கிழமைதோறும் உணவு சாலைகள், சிற்றுண்டி சாலைகள், அனைத்தையும் மாலையில் மூடிவிடும்படி அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளதா ?

[8th August 1966

(இ) ஆமெனில், அதன் காரணங்களென்ன?

(உ) அதனல் சென்னையில் மட்டும் மீதமேற்படும் தானியத்தின் அளவு எவ்வளவு?

(எ) இந்த உத்தரவிலிருந்து மருத்துவமனைகள், பள்ளி உணவு விடுதிகள் இவற்றிற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதா ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Hotels and establishments are not permitted to serve any cereal items of food on Mondays.

(*b*) This has been done to conserve cereals, especially rice, which is in short supply in Madras State as well as the whole of the country.

(*c*) 130 tons of rice per month is being saved in Madras City.

(*d*) The orders do not apply to hospitals and hostels.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், இத்தகைய விதிமுறைகளை மீறி நடந்ததாக ஹோட்டல்காரர்கள் யார் மீதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமையா : அது போன்ற தகவல் என்னிடம் இல்லை.

திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஒரு வாரத்திற்கு ஒரு நாளைக்கு ஒரு நேரம் இம்மாதிரி ஸெரில்ஸ் சாப்பிடாமல் இருந்தால் இந்த உணவுப் பஞ்சம் தீர்ந்துவிடும் என்று அரசாங்கம் கருதுகிறதா ? அப்படியானல் இந்த அரசாங்கத்தினுடைய செயலற்ற தன்மையை வெளிநாட்டிலே உள்ளவர்கள் பார்க்க மாட்டார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : செயலற்ற தன்மை என்று சொல்லுகின்ற பிரச்சாரத்திற்கு இடம் இல்லை. நம்முடைய நாட்டிலே அரிசியைப் பொறுத்தவரையில் கொஞ்சம் பற்ருக்குறை இருக்கிறது. இப்படித் தடை விதித்தால் கொஞ்சம் லாபம் இருக்கும் என்ற அடிப்படையில் தான் இப்படிச் செய்யப்பட்டிருக்கின்றது. இதனல் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடும் என்று சொல்வதற்கு இல்லை.

திரு. எம். எஸ். மணி : இந்த மாதிரி திங்கட்கிழமைகள் எல்லாம் சாப்பிடாத காரணத்தால் எவ்வளவு உணவு தானியம் மிச்சப்பட்டிருக்கிறது என்று சொல்லமுடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : திங்கட்கிழமைகள் எல்லாம் என்று சொல்வது பொருத்தமில்லை. திங்கட்கிழமையில் மாலை நேரம் ஒரு நேரம்தான். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் என்னிடம் புள்ளிவிவரம் இருந்தது, கொடுத்தேன். மற்ற இடங்களைப் பற்றிய புள்ளிவிவரங்கள் என்னிடத்தில் இல்லை.